# கேள்வி அறிவித்தல்

## பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை

## பிரதம செயலாளர் செயலக வளாகத்திற்கான பாதுகாப்புச் சேவை – 2024

## NP/01/03/02/Pro/2024/SS

1. தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக் குழுவினால் (CSPC - Major) பிரதம செயலாளர் செயலக வளாக அலுவலகங்களுக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்குத் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி கோரலானது தேசிய போட்டி விலைக் கேள்வி முறைப்படி மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. கேள்விதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன், பாதுகாப்புச் சபை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு மற்றும் ஒப்பந்தம் வலுபெறுவதற்கும், கேள்விதாரர் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்கள் பகுதி 2 - கேள்வித் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை **பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை, A9 வீதி, கைதடி** எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி ஆவணங்களை வேலை நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பிரதம செயலாளர் செயலகத்தில் பரிசீலிக்க முடியும்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை,A9 வீதி, கைதடி** எனும் முகவரியில் வேலை நாட்களில் 01.11.2023 ஆம் திகதி தொடக்கம் 15.11.2023 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக ரூபா.4,500.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

8. கேள்வி ஆவணங்கள் 16.11.2023 ஆம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக பிரதம செயலாளர் செயலகம் - வடக்கு மாகாணம்,A9 வீதி, கைதடி எனும் முகவரிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

9. சகல கேள்விகளுடனும் ரூபா. 150,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்**

**பெறுகைக் குழு**

**பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை**

**A9 வீதி, கைதடி**

**தொ.பே.இல. - 021 2220840**

**திகதி 01.11.2023**